# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 17.06.2026**

**OS No. : 208/2020**

**Dw : 1**

**Name : திரு.ஜாபர் சாதிக்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது தகப்பனார் தான் செட்டில்மென்ட் பத்திரம் மூலம் தபசில் சொத்தை எனக்கு கொடுத்தார் என்றால் சரிதான். அப்போது அது காலி மனையாக இருந்தது. அதன் பின்னிட்டு நான் அதில் 2010 ல் வீடும், 2 கடைகளையும் கட்டினேன். 2019 ல் நவாஸ்கானுடன் செய்துகொண்ட கிரைய ஒப்பந்தத்தில் தபசில் சொத்து காலி மனையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 29.10.2019 ல் கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட காலக்கட்டத்தில் கடைகளும், வீடும் இருந்தன என்றால் சரிதான். நானும், எனது மனைவி குழந்தைகளும் 2014 முதல் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். எனது மனைவி என் மீது தென்காசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் DVC No. 4/2016 வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 03.09.2021 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது மனைவி, குழந்தைகளுக்கு மாதம் ரூ.10,000/- ஜீவனாம்ச தொகையாக வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நீதிமன்ற அனுமதி இல்லாமல் விற்பனை செய்யக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் நீதிமன்ற உத்தரவின்படி ஜீவனாம்ச தொகையை செலுத்தாததால், எனக்கு 1 வருட சிறை தண்டனை

விதித்து நீதித்துறை நடுவர் நீதிமன்றம் உத்தரவிட்டது என்றால் சரியல்ல, நான் ஜீவனாம்ச தொகையை சரியாக செலுத்தி வருகிறேன். கடந்த ஒரு வருட காலமாக ஜீவனாம்ச தொகையை செலுத்தி வருகிறேன். எனது மனைவி, குழந்தைகளை விட்டுவிட்டு எங்கு வசித்துவந்தேன் என்றால் விழுப்புரத்தில் வசித்துவந்தேன். எனது மனைவி புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்றால் சரிதான். எனது மனைவியின் பெற்றோர்தான் அவரை பராமரித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நானும் வாதி நவாஸ்கானும் கூட்டு சதி செய்து என்னுடைய மனைவிக்கு என்னுடைய சொத்துக்கள் கிடைக்ககூடாது என்பதற்காக இந்த வழக்கை வீண் வம்பாக தாக்கல் செய்து நடத்திவருகிறோம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi